Registered No. M.—253.

விலாசம்.—
'அறிவுவிளக்கம்' பத்திராதிபர்,
திருவனந்தபுரம்.

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."

புத்தகம்—I. { 1901-ஞு ஏப்ரில் மீ 10-உ. / திருவனந்தபுரம். } இலக்கம்—3.

விஷயங்கள்.

எரிமலை அல்லது அக்கினிபர்வதம்.—
A. K. கிருஷ்ணையங்கார்.
இரசாயன நூல்.—K. H. வேங்கடேசுவர ஐயர், B. A.,
ஆங்கிலேய அரசாங்க அமைப்பு.—S. கணபதிப்பிள்ளை.
ஆங்கிலேய தருக்கம்.—K. N. சிவராஜபிள்ளை B. A.,
மதக்ஷமை.—P. V. கணபதிப்பிள்ளை B. A.,
செல்வியரன.—A. K. கிருஷ்ணையங்கார்.
சமாசாரக்குறிப்புகள்.—
நமது பத்திரிகையைப்பற்றிவந்த
நற்சாக்ஷிப்பத்திரங்கள்.—

பத்திராதிபர்.—வளவல, சோ. சிவஞானதேசிகர்.

நாகர்கோவில்;
காஞ்சிகேசன் பிரஸில் பதிப்பிக்கப்படுகின்றது.

இது ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும் 10-ம் உ. வெளியிடப்படும்.

வருஷ சந்தா ரூ. 2—0—0. சஞ்சிகை ரூ. 0—4—0.

தமதி பத்திரிகா போஷகர்கள். (Patrons.)

ஸ்ரீமான் தி. வேதாத்ரீசதாசமுதலியார் அவர்கள்,
ஐக்கோர்ட்டு பென்ஷன் ஜெட்ஜ்.,
திருவனந்தபுரம்.

,, T. பொன்னம்பலம்பிள்ளை அவர்கள்,
Conservator of Forests.,
Quilon.

,, P. தாணுபிள்ளை அவர்கள், M. A., F. M. U.,
Secretary. Travancore Government.,
திருவனந்தபுரம்.

,, S. கணபதிப்பிள்ளை அவர்கள்.
உண்டியல் வியாபாரம்.,
திருவனந்தபுரம்.

,, P. C. வள்ளிநாயகம்பிள்ளை அவர்கள்,
High Court Registrar.,
திருவனந்தபுரம்.

,, மு. முத்துராமலிங்கம்பிள்ளை அவர்கள்,
மகாராஜா சர்வகலாசாலை தமிழ்ப்பண்டிதர்.,
திருவனந்தபுரம்.

,, M. R. கிருஷ்ணருவ் அவர்கள்,
Registration Director.,
திருவனந்தபுரம்.

,, கெ. எஸ். கிருஷ்ணசாமிஐயர் அவர்கள்,
உண்டியல் வியாபாரம்.,
திருவனந்தபுரம்.

,, க. ஸ். திரவியம்பிள்ளை அவர்கள்,
Unjal Superintendent.,
திருவனந்தபுரம்.

,, எஸ். சாமிஅய்யங்கார் அவர்கள்,
திருவனந்தபுரம்.

,, ஐயப்பன்பிள்ளை அவர்கள்,
Inspector of Schools,
Southern Range.,
திருவனந்தபுரம்.

,, பரமேசுவரன்பிள்ளை அவர்கள்,
பென்ஷன் தாசில்தார்.,
திருவனந்தபுரம்.

,, இராகவாச்சாரியார் அவர்கள் B. A.,
தாசில்தார்.,
அகஸ்தீசுவரம் தாலூக்.

,, E. சுப்பராய முதலியார் அவர்கள்,
வக்கீல்.,
ஸ்ரீவைகுண்டம்.

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்—I. | 1901-௵ ஏப்ரில் ௴ 10-உ. திருவனந்தபுரம். | இலக்கம்—3.

[இந்த திருவிதாங்கூர் அரசினரால் பொதுகல்வி பரப்புதற்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் பிரசங்கம் நடாத்தும் சங்கத்தார் ஆதரவில் சென்ற தை-௴ 28-உயன்று திருவனந்தபுரம் ஜூப்பிலி ஹாலில் பிரம்மஸ்ரீ கே. ஜி சேஷய்யர் பி. எ. பி. எல் அவர்கள் தலைமைவகிக்க பிரம்மஸ்ரீ. ஏ. கெ. கிருஷ்ண ஐயங்கார் அவர்களால் வாசிக்கப்பட்டது.—ப—ர்]

எரிமலை அல்லது அக்நிபர்வதம்.

முகவுரை.

சிரியமார்தர்காள்,

இயற்கையின் தன்மையைப்பாடுபட்டுப்படித்து அறிவைப்பெருக்கி மிகத்தேர்ச்சிபெற்றுவருபவர், ஐரோப்பியர்தாம் காரணமின்றிக் காரியம் ஒன்றும் உண்டாகாது என்ற மதிப்பைத் திடமாகக்கொண்டிருக்கும் இவர், ஏதேனும் தோற்றம் உண்டாகும்பொழுது, அத்தோற்றம் அக்காலத்துண்டாவதற்கென்னகாரணம் என்பதைக் கசடறக் கண்டுபிடித்தற்குப் பலவாற்றுனும் முயல்வார். உலகிலுண்டாகும் எல்லாப் புடைபெயர்ச்சியும், அப்புடைபெயர்ச்சியால் உண்டாகும் எல்லாத் தோற்றமும் இவர்க்குச் சிற்சில பாடங்களெழுதிய புத்தகமாம். எல்லாக் காட்சியும் இவர்க்குப் பெரும்வியப்பையூட்டும். ஆயினும் காரணமின்றி ஒரு நிகழ்ச்சியும் உண்டாகாது என்பதே இவரது திடமான கொள்கை. இம் மதித்திறமுடையார் மேன்மேலும் சாஸ்திரங்களைப் புதிதுபுதிதாய்

இயற்றி, அறியத்தரும் பொருட்டொகுதியைப் பெருக்கிவருகிறார்கள். படைப்பின் பெருமை இவர்க்கு வியப்பளிப்பதுபோல் நமக்குவியப்புத் தராது. ஜனங்கள் செய்யும் கொடுமையை ஆற்றாமல் அவர்களைக் கெடுப்பதற்குக் கடவுளால் ஏவப்பட்ட உற்பாதமாக நமது முன்னோர் மதித்து வந்த பல விஷயங்களை, இவர், உலகத்தில் இயற்கையான காரணங்கள் உண்டாக, அக்காரணங்களின் சேர்க்கையால் உண்டாகும்காரியப்பாடே என மதிக்கிறார்கள். நமது மூதாதைகள் அக அறிவைக்கொண்டு புறத்தோற்றங்களுக்குச் சமாதானஞ்சொல்லிவந்தார்கள். இவர் புறவறிவைக் கொண்டு அகவறிவைச் சீர்திருத்திக்கொள்ளு மியல்புடையராதல்பற்றி ஒவ்வொரு தோற்றத்திற்கும் பிரமாணங்கள் ஆராய்ந்து, அப்பிரமாணங்களினால் கிடைக்கும் கொள்கைகளைத் தக்க முகாந்தரங்களைக்கொண்டு நிலைநாட்டி, அதன் பின்னரே இன்னது இன்னகாரணங்கள் உள்ளவிடத்தின்றி நிகழாது என்றுறுதிப்பாடு கூறுவார்கள். இம்மதி விசேஷத்தால் கிடைத்திருக்கும் நூல்கள் எண்ணிறந்தனவாம் அவற்றுள் சிலவற்றையேனும் நாம் நமது நாட்டாருக்கு நம்மொழியில் எழுதிக் கற்பிப்போமாகில் நமது நாட்டாருக்குப் பற்பல நன்மைகள் வந்தெய்தும்.

உலகத்திலுண்டாகும் அற்புதங்கள் பல. அந்தரிக்ஷ இயக்கம், நீராவியெழுச்சி, ஆவி மழையாய்ப் பரிணமித்துச் சொரிதல், கடல் நிலை பிறழாமை, தனிப்பொருள் முயக்கம், அலைக்கிளர்ச்சி, நீர்ப்பிரவாகம், பூநடுக்கம், சந்திரசூரிய கிரகணங்கள், சூரிய சந்திரர்கள், என்றுந் தவறாமல் உதித்தும் அத்தமித்தும் தத்தமக்குரிய காலங்களிற் தத்தமக் குரிய வேலைகளைச்செய்தல், நக்ஷத்திர சாலங்களின் தோற்றம் வீழ்ச்சி முதலிய எண்ணற்கரிய விஷயங்களிலொவ்வொன்றும் அற்புதமயமாம். ஆயினும் இவை, யென்றும் நாம் காண நிகழ்வதுபற்றி நமக்கு அற்புதங்களாகத்தோன்றவில்லை. இஃது நமது மதி விசாலமின்மையைக் குறிக்கின்றதேயன்றி, மதி விரிவுடையார்க்கிவை எத்தனை கோடிநாட் பழக்கமுடையனவாயிருப்பினும் வியப்பைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும்.

மேற்பார்வைக்கு நாம் வாழும் இடமாகிய இப்பூமி, என்றும் ஒரே நிலையிலிருப்பதுபோல் தோன்றுகிறது. கடவுள் ஆதிசிருஷ்டிகாலத்தில், இவ்விடம் நீர் நிலையாகுக, இவ்விடம் நிலப்பகுதியாகுக, இவ்விடம் மலையுண்டாகுக, இவ்விடம் தீவு தோன்றுக, என்று வகுத்திட்டனர் என்றும் அன்றவர் வகுத்திட்டவாறே இன்றுமுலகம் நடைபெறுகிறதென்றும், நாம் நம்பிவருகின்றோம். உண்மையை உற்றுணரப்புகுவோர்க்கு, இக்கொள்கை தவறு என்பது புலப்படும். கடலும் மண்ணும் என்றும் ஓயாமல் மாறுதலடைந்தேவருகின்றன. ஒருகாலத்து நீர் பரவியிருந்த இடத்தில் பிற்காலத்து நிலங்காணுகிறது. பள்ளத்தாக்காய்ச் சிறிதுகாலத்திற்குமுன்னிருந்த இடமின்று மேடாயிருக்கின்றது. முன்

றில்லாத இடத்திலிப்பொழுதாறு ஓடுகிறதும், முன்னாறிருந்தவிடம் இப்பொழுதாறின்றியிருப்பதும் சாஸ்திரவாயிலாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இம்மாறுதல் அனைத்தும்பூகோளத்தின்மேல்நிலத்து நிகழ்கின்றன. இவற்றின் நிகழ்ச்சிக்கு முதற்காரணம் சூரியமண்டலத்தின் சூடேயாம்.

நாம் காணுகவிடமாகிய பூமியின் அடியிடத்து நிகழும் நிகழ்ச்சிகள் இவற்றினும் பெரிய வியப்பைத்தரும். இக்கோளம் உருக்குக்கட்டிபோல் கட்டியான உருண்டைவடிவம் வாய்ந்துளது. நாம் அதன் மேலிடத்தில் இருக்கிறோம். இம்மேலிடத்திற்கே நிலமெனப் பெயரிட்டிருக்கிறோம். நமக்கும், நமக்குவேண்டிய உயிருள்ளவும் இல்லவுமாகிய பொருள்கட்கும், நிற்க அமைந்த இடமாதலால் இதற்கு இப்பெயர்பொருந்திற்று. கோள இயல்நூலில் இதற்கு ஆங்கிலபாஷையில் *Crust* என்பது பெயர். இவ்வண்டத்தை ஆக்கிய அணுக்கள் ஒருகாலத்தில் சேர்க்கையடையாமல் அகன்று, தனித்தனி யோரோவிடங்களில் சஞ்சரித்துக்கொண்டிருந்து, பின்னர் வெகுநாள்கழிந்தபின் அவை அடுத்து நெருங்கி நெகிழ்பொருளாய் ஒழுக்குடைய நிலையிலிருந்து,பின்னரும் பலநாட்கழிய, மேலிருந்த நீர்ப்பகுதிகள் ஆவியாய்மாறித்தனிப்புநீங்க, அவ்விடத்திருந்த அணுக்கள் கட்டியாய் நிலவுருவம் அடைந்தனவென்கின்றனர் அந்நூலுணர்ந்தோர். இவ்வண்டத்தின் மேற்றட்டாகிய சிறிதபகுதியே நிலமாம். இந்நிலத்தின் கனம், நாளடைவில் கூடிவருகிறது. அடியிடம் பெருஞ்சூடுடைய நெகிழ்ச்சிப்பொருளால் நிறைவுற்றிருக்கின்றது. அச்சூடு, பாறைமுதலிய கால்களின்வழியாய் வெளிப்பட்டு, ஆகாயத்திற் கலந்துகொண்டேவருதலாலும், மேலிடத்திற் சூரியவெப்பத்தாலுண்டாகுஞ்சூடு, நிலப்பகுதியைத் தாண்டிக்கொண்டு கீழிடத்திருக்கும் நெகிழ்பொருளிற்கலக்க ஆற்றலின்றியிருத்தலாலும், வரவரப் பூமியின் உள்ளிடத்தில் வியாபித்திருக்கும் சூடுகுறைந்து அங்கிருக்கும் நெகிழ்பொருள் கட்டியாய்ப் பரிணமித்துவருகின்றது. பாறை நல்ல சூடுவாங்கியின்றாதலால் உட்சூடு வெளிப்படுதற்கு வெகுகாலம் வேண்டியதாயிருக்கின்றது.

பூமியினுள்ளிடம் தனிப்புடைய நெகிழ்பொருளால் நிறைவுற்றிருக்கிறதெனக்கூறியதை எங்ஙனம் நம்பலாம் எனில் அதற்குச் சிற்சில சான்று கூறுதும் (1) என்றும்வற்றா நீர்நிலைகாணப் பூமியைக் குழிப்போர்க்கும், உலோகம் வெட்டியெடுப்பதற்காகக் கனிகள்தோண்டி அதனுள் வசிப்போர்க்கும், தளத்திலிருந்து கீழ்ச்செல்லச்செல்ல சூடுமிகுவது நன்குபுலப்படுகின்றது. இச்சூட்டின்பெருக்கம் அகழத்திற்குத்தக்கபடியிருக்கின்றதெனச் சூட்டீ கருவியால் துல்லியமாய் அளந்தறிகிறார்

கள். தரையிடத்திலிருந்து 64-அடித்தாழ்ச்சிக்கு, ஒருபாரனீத்துப்படி உஷ்ணம் கூடுகின்றதாம். படிப்படியாய்க் கீழ்ச்செல்லுவோமெனில் சிறிதுதூரம்போகையில் நமது தரையிலிருக்கும் பாறையும் உருகிப்போகும்படியான சூடு அங்கிருப்பதையுணரலாம் (2) சிற்சில இடங்களில் தளைப்புடைய நீரூற்று பொங்கிவெளிப்படுவதுண்டு. சில இடங்களில் உண்டாகும் ஊற்றுநீர், வெந்நீர்போல் சூடுடையதாயிருக்கிறது. (3) புகையையும் ஆவியையும் கனல்போன்ற செந்நிறமுடைய கற்பொடிகளையும் கல்லுருக்குப்பிரவாகத்தையும் அதிவேகத்துடனும், சிறிதுவேகத்துடனும், வெளியில்வாரிச்சொரியும் வாய்களையுடைய பல மலைகள் பூமியிலெவ்விடத்தும் பரந்துகிடக்கின்றன. இவற்றால் பூமியினுள்ளிடத்தின் தன்மை புலப்படுவதுபோல் வேறெவற்றாலும் புலப்படாது.

நமது பூமியின் உள்ளிடம், நாம் பள்ளிக்கூடத்திற்காணும் பூகோளத்தின் உள்ளிடம்போல் வெறுமையானதன்று. அதன் தன்மையைப் பற்றி மூன்று வெவ்வேறு அபிப்பிராயங்கள் உண்டு. ஆயினும் ஈண்டு கூறப்படும் கொள்கையே இக்காலத்தாரால் ஒப்பப்பட்டிருக்கிறது. பூமி மூன்று நிலைகளையுடையதோர் அண்டம். மூன்றாம் நிலையில் நாம் வசிக்கிறோம். இஃது ஓர்காலத்தில் திரவமாயிருந்ததேனும் குளிர்ச்சியால் கட்டித்தன்மையையடைந்திருக்கிறது. இத்தோட்டின் கனம் சிற்சில இடங்களில் 20-மைலுக்கு குறைவில்லையென மதிக்கப்படுகிறது. அடிநிலை மேற்கனத்தால் அமிழ்த்தப்பட்டும் உருகாதும் ஓடாதும் அடக்கி நிறுத்தப்பட்டிருக்கிறதென்றும், ஆயினும் போதுமான அளவில் இக்கனம் குறைந்துவிடுமெனில், உடன் அந்நிலை மற்றிருநிலையையும் உருக்கிவிடும்படியான சூடுடையதாமென்றும் நினைக்கப்படுகிறது. இவ்விருதட்டுக்கும் நடுவிடத்துள்ள பொருள், போதுமான மேற்பாரம் இல்லாத காரணத்தால், திரவநிலையிலிருக்கிறது. இத்தட்டுப் போதுமானபடி குளிர்ந்துவிடுமாகில் மேல்நிலத்தட்டோடொன்றி அதன் கனத்தைப் பெருக்கிவிடுமென்பதற்குச் சந்தேகமில்லை.

இக்கோளத்தின் உள்ளுறைச்சூடு பலவாயிலாய் வெளியாகின்றதெனக்கூறினோம். அவற்றுள் கடையிற்கூறியதே தலையாயது. அதனைப் பற்றியே ஈண்டு விரித்துரைக்கப்படும்.

இரசாயன நூல்.

முகவுரை

இப்பொழுது நாம்எழுதப்புகுந்தவிஷயமானது ஸயன்ஸ் (Science) அல்லது சாஸ்திரம் என்பதின் ஓர் பிரிவாகிய இரஸாயன நூலாகும். இந்நூலின் வரலாற்றை விவரிக்கப்புகுமுன் பொதுவாய் சாஸ்திரத்திற்குரிய இலக்கணத்தை சற்று கவனிப்போம்.

சென்ற நூற்றாண்டில் சாஸ்திர அறிவின் பெருக்கத்தால், அனேக குணங்கள் மனிதர்களுக்கு விளைந்திருக்கின்றன, என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். பஞ்சை நூலாக்கி ஆடையாக்குவதற்கும், மரத்தை வேண்டுழி அறுப்பதற்கும் சருக்கரை காகிதம் முதலியன உண்டுபண்ணுவதற்கும், உபயோகிக்கிற நீராவி யந்திரத்தின் சக்தி குணாதிசயங்களையும், மணிக்கு 50-60-மைல் வீதம் ஜனங்களையும், பாரமான சுமைகளையும் இழுத்துக்கொண்டு காற்றாய்க் கடுகியோடும் ரயில் வண்டியின் சிறப்பையும்பற்றி சிந்தித்து ஆனந்தத்தை அடையாதவர் எவர்? புகையில்லாமல் வீதியில் டிராம் வண்டிகள் (Tram Cars) ஓடுவதற்கும், ஆயிரக்கணக்கான மயிற்கப்பால் நடக்கும் யுத்த சமாசாரங்களையும் ராஜாங்க விஷயங்களையும் ஒரு கணப்பொழுதில் நமக்குத் தெரிவிப்பதற்கும் சாதனமாயிருக்கிற மின்மயத்தின் (Electricity) சக்தியை வியக்காதவருமுளரோ? இக்காலத்தில் ஓரிடம்நின்று மற்றோரிடத்திற்குக் கம்பியின் துணையுமின்றி சங்கதிகள் போய்வருகின்றன. இப்பொழுது ஒருவருஷ காலத்துக்குமேலாய் நடந்துவரும் டிரான்ஸ்வால் (Transval) யுத்தசங்கதிகளை தவறுதலின்றி 'சுதேசமித்திரன்', 'நாஞ்சிநேசன்', முதலிய பத்திரிகைகளின்வாயிலாய்ப் படித்துவரும் அனேகர்களுக்கு, (1) சூரியகிரணங்களின் உதவியால் தூரிடம் நின்று மற்றோரிடத்திற்கு சங்கதிகள் தெரிவித்துக்கொள்ளுகிற விஷயம் தெரியவரலாம். ஊடுருவிச் செல்லவொண்ணாப் பொருள்களின்வழி, ஒளியைப் பார்க்கவும், பிரதிரூபமெடுக்கவும் வல்லமைதரும் 'ரான்ஜென்ரேஸ்' (Rontgen Rays) எனு மற்புதத்தைச் சென்ற நூற்றாண்டின் கடைசியிற் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

தவிர்த்தும் சாஸ்திரமென்பது பற்பல பிணிகள் நிலையற்று ஒழியும் வகையைத்தேடுகிறது. யுத்த வீரர்களுக்குப் புதிய படைகளை அளிக்கிறது. நம் முன்னோர்களால் கனவிலும் நினைக்கப்பட்டிராத மிக அற்புத

(1) *Helis Graphic Communicvtion.*

மான பாலங்களால் பெரிய நதிகளையும், கடற்கழிகளையும் கடக்கச்செய்கிறது. இடியேற்றை அபாயம் சிறிதுமின்றி வானினின்று புவியில் நடத்துகிறது. கதிரவன் ஒளிபரந்த பகல்போல் இரவின் தொல்லை இருளை நீக்கி ஒளியுறச்செய்கிறது. கடலில் ஆழ்ந்து சஞ்சரிக்கவும், வானில் உயர்ந்துலாவவும், விஷக்காற்று நிறைந்த சுரங்கங்களில் பயமின்றி நுழைந்து நடக்கவும், ஒருவனுக்கு ஆற்றல் அளிக்கின்றது. கைத்தொழில்களும் வியாபாரமுறைகளும் விஸ்தாரமாயுண்டாய், மனிதர்களை யபிவிர்த்தியடையச்செய்கிறது.

இவ்வரிய சாஸ்திர ஆராய்ச்சியினின்று உண்டாகும் பேரின்பத்தை நினைத்துணையேனும் சிந்தியாமல் நாளைக்கழித்தலன்றோ? வாழ்நாளை வீணாக்குதல் ஒரு மனிதனுக்கிவ்வுலகத்தில் ஏற்பட்டிருக்கும் கருமங்களனைத்தும் நன்றாய் முற்றுப்பெற்றதென்று கூறவேண்டுமானால் அவன் வசிக்கும்பிரபஞ்சத்தில்நிகழும் உண்மைமுறைகளையும், காயபலம்வளர்த்தல், சரீரசம்ரக்ஷணம்செய்தல், முதலியவைகளுக்குரிய முறைகளையும், அவனைச்சுற்றிநடக்கும் விசித்திரமான தோற்றங்களின் காரணத்தையறியும் முறைகளையும், பரிஷ்காரமாய் அவன் தெரிந்திருத்தல்வேண்டும். 'மீதுலாவும் வெண்டாரகை'களின் இயக்கங்களையும், மீத்தரையின் உற்பத்தியையும், அவையடையும் மாறுபாட்டையும், "முல்லைசூழ் முல்லை வேலி முயலோடு கவரிமேயும் கொல்லைசூழ்" மலைகளையும், 'செவ்வழிப் பண்ணிற் சிறைவண்டரற்றும்' பள்ளத்தாக்குகளையும், அவைநடுவே களிப்புடன் தவழ்ந்து கலகலவென்றோடும் ஆறுகளையும், ஓடைகளையும் பிறப்பித்த கர்த்தத்துவத்தையும், நம்மைச்சுற்றி வியாபித்திருக்கும் ஆகாயம், நீர், நெருப்பு, வானிற் பரந்தேகும் மேகம், உன்னதமான குன்றின் மேற்புறங்களிலுலாவும் மூடுபனி நானாவித வர்ணங்களமைந்த வானவில், ஆகிய இவைகளின் கூறுபாடுகளையும், மரவர்க்கங்கள் வேர், தண்டு கிளை, இலை, பூ, காய் முதலிய உறுப்புகளாய் விகசிக்கும்தன்மையையும், அவன் அறியவேண்டும்.

மேற்கூறியவைகளனைவற்றையும்பற்றி விவரிக்கும் சாஸ்திரங்கள் பலவுள. அவைகளெல்லாவற்றையும் இப்பொழுது சொல்லப்போகிறதில்லை. நாம் காண்கிற ஒவ்வொரு பொருளின் சேர்க்கையையும், அதில் நிகழும் வேற்றுமைகளையும்பற்றிக் கூறும் இரஸாயன நூலைப்பற்றிப் பேசுவோம்.

நிர்வாகத்தை வகிக்கத்தகாதவர்களென்றுணர்ந்து தம் வேலையினின்றும் நீங்கிவிடுவார்கள். அப்பொழுதும் சபைகலைக்கப்பட்டு மகாராஜாவவர்கள் தமது குடிகளுக்குப் புதுப்பிரதிநிதிகளை நியமிக்கக் கட்டளையிடுவார்கள். மந்திராலோசனை சபை (Cabinet)இது மகாராஜாவவர்களின் மந்திரிகளில் முக்கியமானவர்கள் சேர்ந்த சபை. இவர்கள் லார்ட்ஸ் சபையாரினின்றும், ஜனங்களால் நியமிக்கப்படுகிற காமன்ஸ் சபையாரினின்றும் மகாராஜாவவர்களாற் றெரிந்தெடுக்கப்படுபவர்கள். ராஜாங்க நிர்வாகசம்பந்தமான எல்லாவிஷயங்களும் இவர்களால் ஆலோசிக்கப்பட்டு பெரும்பான்மையோரின் (Majority) அபிப்பிராயப்படி தீர்மானிக்கப்பட்டு அதன்படி விஷயம் எந்தப்பகுதியை (Department) ச்சேர்ந்ததோ அந்தப்பகுதி மந்திரியால் அது நடத்தப்படும். இச்சபையார் செய்யுந்தீர்மானத்தில் எந்த மந்திரிக்கேனும் உடன்பாடில்லையாயின் அம்மந்திரி தம்வேலையை விட்டுவிடலாம் இச்சபை இப்பொழுது கூட்டப்பட்டிருக்கிறபடி 20-பெயர்களைக்கொண்டிருக்கிறது. அவர்களில் முக்கியமானவர்களின்பெயரும் உத்தியோகமும் சம்பளமும் அடிக்குறிப்பிடுவாம்.

பெயர்.	உத்தியோகம்.	சம்பளம்.
லார்ட் சாலிஸ்பரி (Lord Salisbury	முதன்மந்திரி (Prime Minister and Lord Privy Seal)	2,000-பவுன்
Earl Cadogan	அயர்லாந்தில் மகாராஜாவின் பிரதிநிதி Lord Lieutenant of Ireland)	20,000-பவுன்
	இங்கிலாண்டில் லார்ட் சான்ஸலர் (Lord Chancellor of England)	10,000-பவுன்
லார்ட் ஹால்ஸ்பரி (Lord Halsbury)		
(Lord Ashbourne)	அயர்லாந்தில் லார்ட் சான்ஸலர் (Lord Chancellor of Ireland)	8,000-பவுன்
லார்ட் லான்ஸ்டௌன் (Lord Lands-downe)	அன்னியவிஷயங்களின் மந்திரி (Foreign Secretary)	5,000-பவுன்
(Mr. Balfour)	(First Lord of the Treasury)	5,000-பவுன்
ஸி. டி. ரிச்சி (Mr. C. T Ritchie)	உள்நாட்டு மந்திரி (Home Secretary)	5,000-பவுன்

பெயர்		உத்யோகம்	சம்பளம்
சாம்பர்லேன்	(Mr. Chamberlain)	குடியேற்றநாட்டு மந்திரி (Colonial Secretary)	5,000-பவுன்
ஜாண்பிராடிரிக்	(Mr. John Brodrick)	யுத்தமந்திரி (Secretary for war)	5,000-பவுன்
லார்ட் ஜி. ஹாமில்டன்	Lord G. Hamilton)	இந்தியா மந்திரி (Secretary for India)	5,000-பவுன்
	Earl of Selbourne)	கப்பற்சேனை மந்திரி (First Lord of the Admiralty)	4,500-பவுன்
	(Duke of Devonshire)	(Lord President of the Council)	2 000-பவுன்
லார்ட் பால்பர்	(Lord Balfour)	ஸ்காட்லாந்துநாட்டு மந்திரி	2,000-பவுன்
	(Mr. G. Balfour)	வியாபார ஆட்சி சங்கத்தாரின் பிரஸிடண்டு (President of the Board of Trade)	2,000-பவுன்
	"	விவசாயமந்திரி(President of the Board of Agriculture)	2,000-பவுன்
	"	பொதுக்கட்டிடவேலைகளின் மந்திரி (First Commissioner of works)	2,000-பவுன்
	Sir Michael Hicks Beach	பொக்கிஷ மந்திரி (Chancellor of the Exchequer)	2,000-பவுன்

காமன்ஸ்சபை என்பது ஜனங்களின் பிரதிநிதிகள்சேர்ந்த சபையென்றும், 670-பேர் அடங்கப்பெற்றதென்றும், ஏழு வருடத்துக்கொருமுறை கூட்டப்படுமென்றும் லார்ட்ஸ்சபை பிரபுக்கள்சேர்ந்த சபையென்றும், கேபினட் என்பது லார்ட்ஸ் காமன்ஸ் சபையிலிருந்து பொறுக்கி எடுக்கப்பெற்ற மந்திரிகள் சேர்ந்த மந்திராலோசனை சபையென்றும் இவர்களெல்லோருங்கூடின பாரள்மன்று உலகமுழுதும் வியாபித்திருக்கின்ற பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நடத்துகின்றதென்றுஞ்சொன்னோம்.

இங்ஙனம் அதிகாரஞ் செலுத்தும் லார்ட்ஸ் காமன்ஸ் சபையாரில் அநேகம் பிரிவினருண்டு. அவர்களில் முக்கியமானவர்கள் கன்ஸர்வேட்டிவ்ஸ் (Conservatives), லிபரல்ஸ் (Liberals), நாஷனலிஸ்ட்ஸ் Nationalists) என்ற முப்பிரிவினர். இவர்களில் நாஷனலிஸ்ட்ஸ் நீங்கலாக மற்ற விரண்டு கட்சிகளுக்குள் எப்பொழுதும் தீராத வழக்கு நடக்கும். இக்கட்சிகளுக்கு வேறுவேறு தலைவர்களுண்டு. அத்தலைவர்கள் தங்கள் கட்சியால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளையும் முறைகளையுமெடுத்துக்காட்டி, அவைகளே தேசநன்மைக்கேற்றவைகளென்றும், அவைகளை எவரெவர் மேற்கொண்டிருக்கிறார்களோ அவர்களையே பார்லிமெண்டு மெம்பர்களாக நியமிக்கவேண்டுமென்றும் தெரிந்தெடுப்பு (Election) நடக்கிறகாலத்தில் அங்கங்கே பிரசங்கமாரி பொழியாநிற்பர். அன்றியும் அவர், தம்மையே ஜனங்கள் நியமிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் ஜனங்களுக்கு விருப்பமான நடவடிக்கைகளையும், சீர்திருத்தங்களையும் வெகு சிரமமெடுத்துச் செய்வதாக உறுதிசெய்வதும் வழக்கம். இதுவுமன்றி ஜனங்கள் விரும்பின திருத்தங்களையெடுத்துச்சொல்லி அவைகளை எதிர்க் கட்சியார் செய்துமுடிக்கத் தவறிப்போனார்களென்று அவர்சள்மீது குற்றங்கூறுவதுமுண்டு. இங்ஙனமாக, இவ்விரண்டு கூட்டத்தாரில் எவரது தொகை அதிகமாயிருக்கின்றதோ அவரே ராஜாங்கம் நடத்தும் பொறுப்பை வகித்து எழுவருடம் ஆள உரிமைப்பட்டவர். இவர்களிலிருந்தே முன் கேபினட் என்றுசொன்ன மந்திராலோசனைசபை மந்திரிகளும் உத்தியோகஸ்தர்களும் எடுக்கப்படுகிறார்கள். ஆஸ்டிரேலியாமுதலிய குடியேற்ற நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் கவர்னர், கவர்னர் ஜெனரல்களாக நியமிக்கப்படுபவருமிவர்களே. எங்கு பார்ப்பினும் இவரது அதிகாரமுறையே செல்லும்.

குறைந்த தொகையையுடைய மற்றக் கூட்டத்தார் எதிரிகள் (Gentlemen of the opposition) என்ற பெயரைத் தாங்கினவர்களாய் ராஜாங்கம் நடத்துங் கட்சியார்மேல் எப்பொழுதுங் குற்றங்கூறுமியல்பினராகி ஆரவாரித்து அடங்கி நிற்பர்.

நாஷனலிஸ்ட்ஸ் என்பவர் அயர்லாந்துதேசத்தார். இவர்தம் தேசநன்மையைக்கருதுபவராய் காலத்துக்கேற்றபடி மற்றஇரண்டு கூட்டத்தாரில் எவர்தமக்கு அனுகூலத்தைவிளைவிப்பரென்று தோன்றுகின்றனரோ அவரோடுசேர்ந்துகொள்வார்கள். இராஜரீகம் சரியானபடிநடப்பதற்காகவும் ஜனங்களின் குறைகளெல்லாம் நிவிர்த்தியாகவும் இராஜாங்கநிர்வாகத்தில் பிசகுகள்நடவாமலிருப்பதற்காகவுமே

பார்லிமெண்டில் இக்கட்சிப் பிரதிகட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. கண்ஸர்வெட்டிவ் கட்சியார் தவறுசெய்தால் அதைக்கண்டிக்கலிபரல் கட்சியாரும், லிபரல்கட்சியார்தவறுசெய்தால் அதைக்கண்டிக்க கண்ஸர்வெட்டிவ் கட்சியாருமிருப்பதனால் இருகட்சிகளும் அநீதிசெய்ய அஞ்சுவர்,

கண்ஸர்வெட்டிவ் கட்சியாரேதற்காலம் செழித்தோங்கி இராஜரீகத்தை நடத்திவருகின்றனர் லார்ட்ஸ்சபையில் முக்கியமந்திரியாகியலார்ட் சாலிஸ்பரி (Lord Salisbury) யின்கீழும் காமண்ஸ்சபையில் பால்பரின் (Mr. Balfour) கீழும் கண்ஸர்வெற்றிவ் கட்சியார் ஒருங்குகூடி மிகுந்தபலங்கொண்டிருக்கிறார்கள்.

லிபரல் கட்சியார் முற்காலத்தில் எந்நிலைமையினராயிருந்தபோதிலும் தற்காலம் சிதறுண்டுகிடக்கிறார்களென்பதற் கையமின்று. இவர்க்குத் தலைநாயகமாய் உற்ற துணையாயிருந்து நடத்திவந்த கிளாட்ஸ்டன் (Gladstone) என்ற பெருமையாளர் இருந்தகாலத்து இக்கட்சியார் வெகு புகழ்பெற்றிருந்தனர். இவர் நான்குமுறை முக்கிய மந்திரியாயிருந்தவர். இவர் காலஞ்சென்றதும் லிபரல்கட்சியார் மீகாமனையிழந்த மரக்கலம்போல, தம்மை நடத்துவதற்குச் சரியான தலைவனின்றி கண்ஸர்வெற்றிவ் கட்சியாகிய சமுத்திரத்தினிடையே தத்தளித்துக்கொண்டிருக்கின்றனர். கிளாட்ஸ்டனுக்குப்பின் லார்ட் ரோஸ்பரி (Lord Rosebury)என்பவர் முதன்மந்திரியாகி லிபரல்கட்சியின் தலைமையைப் பூண்டார். இவர் தலைமைபூண்ட சிறிதுகாலத்துக்குள் லிபரல் கட்சியிலேயே சிலரிவரை விரோதிக்கத்தொடங்கினர். மார்லி, லபூச்சர், ஸர் வில்லியம் ஹார்கோர்ட் (Morley, Labouchire, Sir William Harcourt) இவர்களெல்லாம் விரோதிக்கவே லார்ட் ரோஸ்பரியுந் தம் வேலையினின்றும் நீங்கினார். கிளாட்ஸ்டனும், ரோஸ்பரியும், நீங்கவே, பானர்மான் (Sir Henry Campbell Bannerman) தற்காலம் தலைவராயிருந்தும், லிபரல்களெல்லாம், தம் மனம்போனபோக்கில், தம்முள் மாறுபடவும் லிபரல் கட்சியானது இப்போதிருக்கும் க்ஷீணதசையையடையவு நேர்ந்தது. ஒரு கூட்டத்தாருக்குக் கெடுதல்வரும்பொழுது மற்றொரு கூட்டத்தார் தலையெடுப்பது உலக வழக்காகவே கண்ஸர்வெற்றிவ்கட்சியுந் தற்காலம் தலையெடுத்து வளர்ந்தோங்கியிருக்கிறது. சென்ற செப்டம்பர் மாதத்திற் கலைக்கப்பட்ட பார்லிமெண்டில் இராஜரீகத்தை வகித்தவர்களும் கண்ஸர்வேறிவ்களே, நவம்பர் மாதத்தில் திரும்பவுங்கூடின பார்லிமெண்டில் இப்பொழுது இராஜரீகம் வகிப்பவர்க

ரூபா ஆஸ்திமட்டுந்தானிருக்குமாயின் அவன் உணர்ச்சி ஒருவிதமே; அன்றி நேற்றைத்தினம் ஒருகாசுமில்லாதிருந்த பஞ்சைக்கு இன்று 10000-ரூபா வந்து சேருமாயின் அவன் உணர்ச்சிமற்றொருவிதமே. இவ்விரண்டு உணர்ச்சிகளும் எதிரிடையானவையென்று யான் எடுத்துக்காட்டாதே யார்க்கும் விளங்கும்.

4. இதுபோலவே, நாம் ஒன்றை அறியவேண்டுமாயினும் வேறுபாடு அல்லது மாறுகை என்பது முக்கியமாகவேண்டும். வேறுபாட்டிற்கு இரண்டு பொருளேனும் அவசியம். ஆகையால் அறிவினுற்பத்தி இரண்டுபொருளேனுமின்றி ஒருவாற்றானும் இயலாது.

நாம் குளிர்ச்சியினின்று மாறுவதனால் சூட்டை அறிகின்றோம்; இருட்டினின்று மாறுவதனால் வெளிச்சத்தை உணருகின்றோம்; கீழ் என்று ஒன்று இருப்பதனாலேயே மேல் என்பது நமக்குத் தெரிகின்றது. நம்முடைய அறிவெல்லாம் இவ்விதம் தொந்தப்பட்டுள்ளதே; ஒரு பொருளைக்குறித்து நிர்த்தொந்தமாகிய அறிவு (அதாவது வேறொரு பொருளோடு தொந்தமாகாத அறிவு) இல்லவே இல்லை. அங்ஙனம் நிர்த்தொந்தமான அறிவுளது என்று சாதிப்பவர் அறிவின் பொதுவிலக்கணம் அறியாதவரே. அசைவின்மை அறியாதவன் அசைவறியான்; கோணலான வரி காணாதவனுக்கு நேரான வரி அறிபொருளன்று. இதுபற்றியன்றோ கம்பரும் சாஸ்திரீகவுண்மைகளை பொதுப்படக்கூறும் அருங்கவிக்கூட்டத்தினராதலால் "உண்மையில்லை பொய்யுரையிலாமையால்" என்று கூறி வேற்றுமைப்பிரமாணத்தை இராமாயணத்திலும் சூசிப்பிக்கின்றார்?

இவ்வாறு சோடியாய் வரும் இரண்டு பொருள்களில் ஒன்றைக் காட்டிலும் மற்றொன்றில் நாம் அதிக கவனத்தை செலுத்தலாம். இங்ஙனம் செய்வதனால்தான் ஒரு பொருளையோ ஒரு குணத்தையோ தனியே எண்ண இடமுண்டாகின்றது. குளிர்ச்சியைப்பார்க்கிலும் வெப்பத்தை நாம் அதிகமாக எண்ணலாம்; கோணலைப்பார்க்கிலு நேர்மீது அதிக கவனம் செலுத்தப்படலாம். இதனால் வெப்பம், நேர் முதலியன நமது அறிவின் வெளிக்குறிப்பாகவும், குளிர்ச்சி, கோணல் முதலியன உட்குறிப்பாகவும் அமையும். வேறுபாடு எனப்படுவது இரண்டு மாதிரியாம். குளிர்ச்சியிலின்று சூட்டிற்கு வருவது ஒன்று; அன்றி சூட்டினின்று குளிர்ச்சிக்கு வருவது பிறிதொன்று. முன்னதில் சூடென்பதை அதிகமாக அறிவோம். பின்னதில் குளிர்ச்சியென்பதை அறிவோம். எந்நிலைமைக்கு வருகின்றோமோ அதுதான் நமது அறிவில் வெ

ளிப்படையாய்த் தோன்றும்; எந்நிலைமையினின்றும் வருகின்றோமோ அது உள்ளமைந்தே கிடக்கும். சூட்டை அறியுங்காலத்தில் சூடென்பது வெளிப்படையறிவு; ஆயினும் இதனுள் குளிர்ச்சி என்னுமறிவும் புதைந்துகிடக்கின்றது.

மேற்கூறிய வேற்றுமைப் பிரமாணம் தருக்கத்திற்கு மிகவும் அவசியம். பெயரிடு*, பெயர் வரையறை‡, வாக்கியம் முதலியவற்றை பேசுமிடத்து இப்பிரமாணம் உதவுகின்றது தர்க்கப்போலி§ களில் அனேகத்தை சீர்திருத்தவும் இது பிரயோசனப்படுகின்றது.

ஒற்றுமைப் பிரமாணம்.

5. நமது இந்திரிய நரம்பில் பதிக்கப்படும் பதிவானது சிறிதுநேரஞ் சென்றபின் திரும்பவும் அம்மாதிரியே பதிக்கப்படுமாயின் நமக்கு ஓர் விசேஷ உணர்ச்சி புதிதாய் ஜனிக்கின்றது: அதாவது, இரண்டு பதிவுகளிலுமுள்ள ஒற்றுமையறிவே இரண்டென்ற வேற்றுமையிருப்பினும் அவைகள் ஒரேமாதிரியாயிருக்கும் ஒற்றுமையுந் தோன்றாதிராது. இவ்வறிவு உண்டாவது ஒற்றுமைப்பிரமாணத்தின்படியென மானதசாஸ்திரிகள் கூறுவர்.

ஒரு விளக்கெரிகின்றதை நாம் பார்க்கின்றோம். அவ்விளக்கை அணைத்தவுடன் இருட்டாய்விடுகின்றது. மீட்டும் அவ்விளக்கைக் கொளுத்திடின் வெளிச்சமுண்டாகின்றது. இதனால், முதற்கூறிய வேற்றுமைப் பிரமாணத்தின்படி வெளிச்சத்திற்கும் இருட்டிற்கு மிருக்கும் வேற்றுமையை உணர்ந்ததுமாத்திரமன்று கொஞ்சநேரம் இருட்டினால் பிரிக்கப்பட்ட இரண்டு வெளிச்ச சமயங்களின் ஒற்றுமையையும் அறிந்துகொள்ளுகின்றோம். பிரபஞ்சப்பொருளை ஒரு பிரமாணத்தினால் பிரித்தறிகின்றோம்; மற்றோர் பிரமாணத்தினால் ஒப்பிட்டறிகின்றோம். பழம் என்னும் பொருளை காய், பிஞ்சு, பூ, அரும்பு, இலைமுதலிய பொருள்களினின்றும் வேற்றுமைப்படுத்தி அறிவதுந்தவிர வேறுபழங்களோடு அதற்குள்ள ஒற்றுமையினாலும் அறிந்துகொள்ளுகின்றோம்.

அறிவு எனப்படுவது வேற்றுமை ஒற்றுமைகளின் சேர்க்கை.

6. ஒரு பொருளைப்பற்றிய நமதறிவு, அப்பொருளிலிருந்தும் வேறுபாடுடைய மற்றைப் பொருள்களினின்றும் அதனை

---

* Naming.
‡ Definition.
§ Fallacy. இதனை வடமொழித் தருக்கநூலார் 'ஹேது ஆபாசம்' என மொழிவர்.

வேற்றுமைப்படுத்துவதும், அப்பொருளோடு ஒப்புடைய வேறு பொருள்களோடு அதனை ஒற்றுமைப்படுத்துவதுமே.

நமது அறிவிற்கு வேறே வேண்டும் அம்சம் நினைவு அல்லது ஞாபகம் என்னும் மனதின் சத்தியே; இந்த சத்தி வேற்றுமையையும் ஒற்றுமையையுங் காணும் மனதின் இரண்டு சத்திகளுக்குட்பட்டுப்போகின்றது.

சூட்டைக்குறித்து நாம் அறியும் அறிவில் (i) சூட்டைவிட்டு குளிர்ச்சியென்னும் நிலையை அடைய உண்டான வேற்றுமை உணர்ச்சியும், (ii) இடைவிட்டு இடைவிட்டு அதேமாதிரி வேறு சூடான நிலையை அடைய உண்டான ஒற்றுமை உணர்ச்சியும் கலந்திருக்கின்றன. சூட்டினின்றும் குளிர்ச்சி, குளிர்ச்சியினின்றும் சூடு என்னும் மாறுகையைத் தவிர வேறு அனேக புலப்பாடு* அல்லது உணர்ச்சியைத்தரும் மாறுகையுமுள. சூட்டினின்றும் வெளிச்சத்திற்கு வரலாம்; அல்லது நாற்றம் என்னும் ஓர் உணர்ச்சிக்கு வரலாம்; அல்லது ஒலி என்னும் ஓர் உணர்ச்சிக்கு வரலாம். இங்ஙனம் பற்பல உணர்ச்சிகள் வருந்தோறும் இவைகளினின்றும் சூடு என்னும் உணர்ச்சியைப் பிரித்தறிகின்றோம். சூடு என்பதற்கு உடம்பாட்டுப்பொருள் சுடுவது என்றிருப்பினும் நம்முடைய அனுபவம் வளர வளர எதிர்மறைப்பொருளாய், அது வெளிச்சமன்று, நாற்றமன்று, ஒலியன்று எனச் சேர்த்துக்கொள்ளுகின்றோம். இவ்வாறாகவே ஒவ்வொரு புது உணர்ச்சி அல்லது புலப்பாடும் சூடு என்னும் உணர்ச்சியின் எதிர்மறைப்பொருளை அதிகரிக்கச்செய்கின்றது.

பழுக்கக் காய்ந்த ஓர் இருப்பு சலாகையில் சூடு என்னும் குணத்தைத் தவிர வேறு குணங்களுமிருப்பதாக உணருகின்றோம்: கட்டிமை, கனம், நீளம், உருட்சி, ஒளி முதலிய குணங்கள் சூடென்னுங் குணத்தோடு அச்சலாகையில் சேர்க்கையுற்றிருப்பதாகத் தெரியும். இக்குணங்கள் ஒவ்வொன்றும் வேற்றுமை ஒற்றுமைப் பிரமாணங்களின் வாயிலாய்த்தான் வெளியாகின்றது. இரும்பின் கட்டிமை குணத்தை மரம், கல், மண்முதலிய பொருள்களின் கட்டிமை குணத்தோடு ஒற்றுமைப்படுத்தி நீர், எண்ணெய், காற்று முதலியவற்றின் கட்டிமையின்மை என்னுங் குணத்தினின்றும் வேற்றுமைப்படுத்தி அறிந்துகொள்ளுகின்றோம். இரும்பின் கனம் என்னுங் குணத்தை ஈயம்போன்ற பொருள்களின் கனமிகுதியோடு ஒற்றுமைப்படுத்தி பஞ்சுபோன்ற பொருள்களின் கனக்குறைவினின்றும் வேற்றுமைப்படுத்துவது நம்மனதின் தன்மை. இது போன்றே வேறு குணங்களும் நம்மால் அறியப்படுகின்றன.

---

* Sensation.

ஆகையால் ஏதாவது ஓர் பிண்டப்பொருளை* (அல்லது அகேவலப் பொருளை)க்குறித்து நாம் அறியும் அறிவானது வேற்றுமை ஒற்றுமைப் பிரமாணங்களின்படி மனது சேர்த்துக்கொள்ளும் எண்ணங்களே. இவ் வெண்ணங்கள் நினைவு அல்லது ஞாபகம் என்னும் சத்தியினுல் மனதில் தாபித்துச் சேமிக்கப்படுகின்றன. இங்ஙனம் நெடுநாள் சேமிக்கப்பட்டுவரும் நமது மன எண்ணங்கள் யாவற்றிற்கும் பொதுவாய் 'அறிவு என்று பெயர்.

அறிவு அகத்தறிவு புறத்தறிவு என இருவகைப்படும்.

7 ஒரு வீட்டைக்குறித்தோ, ஒரு மலையைக்குறித்தோ, ஒரு நக்ஷத்திரத்தைக் குறித்தோ, ஒரு யானையைக் குறித்தோ, அல்லது இவைபோன்ற வேறு வெளிப்பொருள்களைக் குறித்தோ, நம்மனதிலுண்டாகும் அறிவிற்கு புறத்தறிவு என்றுபெயர்; இது வெளியுலகத்தை ஒட்டினது. இன்பத்தைப்பற்றியோ துன்பத்தைப்பற்றியோ, ஆச்சரியத்தைப்பற்றியோ, கோபத்தைப்பற்றியோ, அல்லது இவைபோன்ற வேறு அகநிலைமைகளைப்பற்றியோ, நம்மனதிலுண்டாகும் அறிவிற்கு அகத்தறிவு என்று பெயர்; இது உள்ளுலகத்தை சம்பந்தித்தது. இவ்விருவித அறிவையும் மனிதர்கள் சேர்த்து தம்மனதில் சேமிக்கின்றுர்கள். சிலருடைய மனதில் அகத்தறிவு அதிகரித்திருக்கலாம்; வேறு சிலருடைய மனதில் புறத்தறிவு அதிகரிததிருக்கலாம்; மனிதர்பால் நிகழும் அறிவு அனைத்தும் இவ்விரு பிரிவிற்குள் அடங்கும்; இவையினுள் வராஞானமும் உளது எனக் கூறுதல் வெற்றுரையும் வாய்ப்பேச்சுமே தவிர மெய்க்கூற்றன்று.

அறிவு (i) ஒருமையும் பிண்டமும் (ii) பொதுமையும் கேவலமும் என இருபகுதி உடையது.

8. ஓர் அறையில் குறித்த ஓர்காலத்திலிருக்கும் ஒருமேசையினைக்கண்டு நமக்குண்டாகும் அறிவு ஒருமையும்3 பிண்டமு4 மானதெனக் கூறலாம்; யாதாயினுமிடத்தில் யாதாயினுங் காலத்தில் யாதாயினும் மேசையை நாம் எண்ணில் அவ்வறிவு

---

* Concrete object.

1 Objective knowledge.

2 Subjective knowledge.

3 Individual.

4 Concrete.

பொதுமையும்[1] கேவலமும்[2] உடையதாகின்றது. முன்னதில், நம்மறிவு ஒரே மேசையைக்குறித்து நிற்பதனால் ஒருமையாயிற்று; பின்னதில், எவ்வித மேசையையும் குறிப்பதனால் பொதுமையாயிற்று. முன்னதில், மேசையின் நீளம், வீதி, கனம், கட்டிமை, நிறம் முதலிய குணங்கள் குறித்த அளவில் சேர்தது அறியப்படுவதனால் அது பிண்ட அறிவாகின்றது; பின்னதில், மேற்கூறிய குணங்களின் அளவைக் கருதாது மேசையின் பொதுவிலக்கணங்கள்மட்டும் பிரித்து அறியப்படுவதனால் இது கேவல அறிவு என்னப்படுகின்றது. "என் கையில் இப்பொழுதிருக்கும மாம்பழம்" என்று ஒருவன் வெளியிடும் கன் ஒருமையும் பிண்டமுமாகிய அறிவு அவ்வொரு பழத்தினைச்சுட்டி பிறவிடத்து பிறசமயங்களிலிருக்கும் மாமபழங்களை விலக்கும்; ஆனால் "ஓர் மாம்பழம்" என்று ஒருவன் எண்ணும பொதுமையும் கேவலமுமாகிய அறிவு எல்லா மாம்பழங்களையுஞ் சுட்டி பிறபொருள்களை விலக்கும். ஒற்றுமைப் பிரமாணப்படி மனதிற்கிருக்கும் வலிமையினால் அநேக ஜாதி மாம்பழங்களையும நோக்கி அவை அனைத்துள் நிகழும் வேற்றுமையினைப் பாராட்டாது, பொதுவிலக்கணங்களைமட்டும தொகுத்து பொதுமையும் கேவலமுமாகிய அறிவை நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். இவ்விதம பொதுமையும கேவலமுமாகிய அறிவை உண்டுபண்ணுவதற்கு மனிதர் மனம் பெற்றிருக்குஞ் சத்திக்கு பொதுமைப்படுத்துஞ்சத்தி[3] யென்று பெயர் கூறுவர்.

கேவலஞானம் என்னும் பொது அறிவின் தன்மையைக் குறித்த விவகாரம்.

9. பொது அறிவு[4] என்பது வெவ்வேறு தனிப்பொருள்களிடையிருக்கும் ஒற்றுமையினைக் குறிக்கும் அறிவே; இவ்வொற்றுமையினைக் காட்டத்தான் 'பொதுப்பெயர்' ஒன்று அ

1. General.
2. Abstract.
3. Generalising Power.
4. General knowledge or Abstract Ideas.

தற்குச் சூட்டுகின்றோம். பொதுப்பெயர் மட்டிலுமுளதே தவிர அது குறிக்கிற பொதுப்பொருள் ஒன்றுமில்லையென்பதே தற்காலத்தில் பெரும்பாலாருடைய கொள்கை. இக்கொள்கைக்கு பெயர்வாதம்1 என்று பெயர்; இதனையுடையோர் பெயர்வாதியர்2 என்று அழைக்கப்படுவர்.

வெள்ளை, மிருகம், புத்தி, வட்டம் முதலிய பொதுப்பெயர்கள், சிற்சில குணங்களில் ஒற்றுமைப்பட்டிருக்கிற பொருள்களுக்கு அவ்வொற்றுமையினைக் காட்டும்பொருட்டு இடப்பட்ட பெயர்களாம். பால், கொக்கு, சுண்ணாம்பு. நுரை, 'தவளமாடம்' ஆகிய பல்வேறு பொருள்கள் அநேக குணங்களில் வேறுபடினும் 'வெண்மை யென்னும் பண்பைப் பொருந்தியிருப்பதில் ஒற்றுமைப்படுகின்றன. இவ்வொற்றுமையினையே "வெள்ளை" என்னும் பொதுப்பெயரிட்டு அழைக்கின்றோம். ஏனைய பொதுப்பெயர்களின் உற்பத்தியும் இவ்வாறே.

பொது அறிவு பொதுப்பெயரோபன்றி ஒரு பொருளைக் காட்டுவதன்றெனக்கூறும் பெயர்வாதியர் மதத்தைத்தவிர வேறும் இரண்டு மதங்கள் இவ்விஷயத்திலுள.

பொதுப் பெயர்கள் குறிக்கும் பொதுக் குணங்கள், அக்குணங்கள் பொருந்திய பொருள்களினின்றும் வேறாயிருக்கின்றனவென்று ஒரு சாரார் கூறுகின்றார். உலகில் பொருள் (இடமடைக்கிற வஸ்து) இருப்பதுபோலவே பொதுக்குணங்களும் மெய்யாக இருக்கின்றன என்பதனால் இக்கொள்கைக்கு மெய்வாதம்3 என்று பெயர்; இக்கொள்கையுடையோரது நாமம் மெய்வாதியர்4.

கிரீஸ் தேயத்தில் பூர்வத்திலிருந்த தத்துவ சாஸ்திரிகளிலொருவராகிய பிளேற்றோ என்பவரும் அவரைப் பின்பற்றினவர்களும் மேற்கூறப்பட்ட மெய்வாதியரே. பொருளின்றி, அளவின்றி, நிறமின்றி, வேறு ஒரு குணங்களுமின்றி "வட்டம்" என்ற ஒரு வஸ்து உண்மையில் இருக்கின்றதென இவர் நம்பினர்; மானுடகுணவேற்றுமை ஒன்றுமில்லாத பொதுமனிதன் ஒருவன் உளனென்பது இவரது எண்ணம். இது மாதிரியே ஒவ்வொரு பொதுப் பெயர்களுக்கும் இத்திறத்தார் ஒவ்

---

1. Nominalism. 2. Nominalists.
3. Realism. 4. Realists.

பட்டு நேராய் அரசனிருக்குமிடத்தை நாடிவரப் புறப்பட்டுத் தன்மாடத்தின் வெளிவாயிலில்வந்து கதவைத்திறக்க அந்த இதற்கு முன்னென்றும் தான்கண்டும் கேட்டுமறியாத இரண்டுபடைச் சேவகர்கள் உருவின கத்தியும் கையுமாய் நிற்பதைப் பார்த்தாள். இக்காட்சி அவளுக்குப் பெருந்திகில் விளைத்ததேனும் வெளியிலிறங்கக் காலெடுத்துப் படிமீது வைக்க எத்தனித்தாள். அப்போர்க்கோலங்கொண்டு நின்ற வீரர்கள் உடனே அவளை வெளிச் செல்லவொட்டாமற் றடுத்தார்கள்.

“இதென்ன அநீதி? அரண்மனைக்குள் பெருங்கூச்சலும் சச்சரவும் நிறைந்திருக்கின்றன. நான் சென்று என்பிதாவைநாடிவருவேன், விடுங்கள்” என்று வெகுகம்பீரமாய்ப் பேசினாள்.

அவள் யாதுசொல்லியும் அவர்கள் அவளைப் புறஞ்செல்லச் சம்மதித்திலர். அவளை வெளியில் விடக்கூடாதென்று அவர்களுக்குக் கண்டிப்பான உத்தரவு கிடைத்திருக்கிறதென்று அவர்கள் சொன்னதைக் கேட்டு மறுபடியும் தன்னில்லிற்குத் திரும்பிப்போய் அங்கு மிகப் பயந்து தன் தோழிமார் ஏவற்பெண்கள் முதலானவர்களுக்குமிச்செய்தியைக்கூற அவர்களும் நடுநடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

சிறிதுநேரஞ் செல்லத் தடதடவென்று தம்மிடம் நோக்கிவருகிற ஒரு அடிச்சத்தம் அவர்கள் காதிற்பட்டது. உடனே காலவனும் அவர்கள் முற்படத்தோன்றினான். இதற்குமுன் காலவன் செல்வியாள் முன்னிலையில் வந்தால் என்னஉபசாரங்கள் செய்து வந்தனனோ அன்ன உபசாரங்கள் ஒன்றும் அப்பொழுது செய்யாமல் வெறித்த தண்டாகாரமாய் நின்றுகொண்டு சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் ஏறவுமிறங்கவும் கண் கொட்டாமல் அவளைப்பார்த்துக் கொண்டே நின்றான். பேசத்துணிவதற்கு வெகுநேரம் வேண்டிவந்தது.

“பெண்ணரசே உன் பரிசாரகப் பெண்களை அரண்மனையிலிருந்து இப்பொழுதே வெளியாக்கிவிடுக; இக்கோயிலில் ஓர் பேராபத்துவிளைந்திருக்கின்றது. அதனை உன்னிடத்துத் தனித்துரைக்கவேண்டும்” எனக்காலவன் கூறினான்.

அங்ஙனமே அப்பெண்ணரசி உடன் தன்பரிசாரகப்பெண்களையும் தோழிமார்களையும் வெளியிற் செல்லுமாறு சைகைகாட்டியனுப்பிவிட்டு என்றும்போலன்றி இன்று இம்மந்திரி இவ்வாறொழுகுவதற்குக் காரணமென்னோதெரியவில்லையே என்று மனச்சலிப்புற்றனளாய்த் தூண்போலுடலசையாமல் நின்றனள். காலவன் வெறிகொண்ட மிருகம்

போல் தன்னைமறந்து சிற்சில மொழிகள் பகர்வானாயினன். "அரசனிறந்துபட்டான்" என்றான்காலவன். இச்செய்தி அப்பெண்ணரசியைத் தூக்கிவாரிப்போட்டது. சிறிதுநேரஞ்செல்ல அவள் கையைப்பிசைந்துகொண்டும் கண்கொட்டாமல் இறுக்கப்பார்த்துக்கொண்டும் காலவன் பக்கத்திற்சென்று அவன் முகத்தைப்பார்த்து

"என்ன! என்தகப்பனிறந்தானென்றீரா? நான் அவரை விட்டுப்பிரிந்துவந்து இன்னும் ஒருமணிநேரம் ஆகவில்லையே. என்ன! நான் அங்கு போய்ப்பார்க்கட்டும்! உம் வார்த்தையில் எனக்கு நம்பிக்கைவரவில்லை. அவரென்னிடத்தில் எவ்வளவு பக்ஷம்வைத்திருந்தார்!. ஐயோ! இனியென்னைச் செல்வி, செல்வி என்று யாரழைக்கப்போகிறார்! நான் அவரைப்போய் நேரிற்பார்த்து அவரை 'ஐயா! செல்வி இதோ வந்திருக்கிறேன்' என்பேனாகில் ஒருவேளை அவர் என் குரலைக் கேட்டெழுந்து என்னுடன் பேச ஒருக்காலுடன்படினும் படலாம். நான் அவரைப் பார்க்கப்போகிறேன்" என்றனள் செல்வியாள்.

செல்வியாள் போக ஒரு அடி எடுத்துவைக்கவே காலவன் போகக்கூடாதென் றவளைத்தடுத்தான்.

"இப்பொழுது அரசன் பக்கத்தில் வைத்தியனும் அவனுடைய பரிவாரங்களுமிருக்கின்றனர்; நீ அவ்விடம் இப்பொழுது போகக்கூடாது" என்றான்.

இதைக் கேட்டுச் செல்வியாள் சினங்கொண்டு அதி கம்பீரத்துடன் காலைத் தூக்கித் தரையில் ஒரு மிதிமிதித்துவிட்டு அவனைப்பார்த்து,

"காலவ! யான் இன்னாள் என்பதை மறந்தனைபோலும்! எனக்குரிய மரியாதைகளை விலக்கினைபோலும்! உன்னை யாளாக்கிவைத்திருக்கும் மன்னன் பெற்றெடுத்த அருமைப் புதல்வி யான் என்பதைச் சற்றும் நினைத்திலைபோலும்! என் பிதாவை யிப்பொழுதே எனக்குப் பார்க்கவேண்டும்" என்று வெகு முறுக்காய்ப் பேசினள். இவ்வளவு தைரியத்துடன் வாதாடிக்கொண்டு நிற்கையிலும் அவள் கண்களிலிருந்து மடை திறந்துவிட்டாற்போல் நீர்த்தாரை பாய்ந்துகொண்டே யிருக்கின்றது.

"நான் உனக்கு இப்பொழுது அனுமதி தரமாட்டேன்; நீ அவரைப் போய்ப்பார்க்கவேண்டாம்; யான் பழைய காலவனல்லன்; உன்னை யான் பணிந்துநடக்கக் கடமைப்பட்டிருந்தகாலம் சென்றுவிட்டது; இன்றுமுதல் செல்விநாட்டுக் கதிபதியாவான் ஓர் புத்தரசன் என்றறி; அவ்வரசும் யாமே என்றான்.

செல்வியாளிதைக்கேட்டுத் திடுக்கிட்டுப் பின்னடைந்தாள். இதனைக்கேட்டு அவளுக்குண்டான அதிசயத்திற் களவில்லை.

“என்ன பிதற்றுகிறீர்! என் பிதா இறந்தாரென்ப துண்மையாயின் அவர் தானத்திற் குரிமைபூண்ட உக்கிரசேனன் உயிருடனிருக்கவில்லையா? இப்பொழுது அவரிங்கில்லையே யென்பீரெனில் யானிருக்கின்றேன். அவர் வருமட்டும் யானே இந்நாட்டை யரசுபுரிவேன். எனது பிதா நுங்கையில் மந்திரித்துவம் கொடுத்தது குரங்கின்கையில் கொள்ளிக்கட்டையைக் கொடுத்ததுபோலன்றோ ஆயிற்று” என்றாள்.

இதைக்கேட்ட காலவன் உரக்கச் சிரித்து “இதுபோன்ற காலங்களில் அறத்தைவிட மறமே மேலான வலிமையுடையதென் றறிந்திலை போலும். நீ செல்விநாட்டை யாளத் தடையேதுமில்லை; ஆயினு மென்னுடன் சேர்ந்தாலன்றி உன் கருத்து நிறைவேறாது. அழகிய வசனங்களும் இனிய மொழிகளும் சிறிதுமிங்கு பயன்படாவென்றறிதி. உன்னுடைய பிதாவின் தானத்தை எவ்வளவு காலமாய்க் கவர்ந்துகொள்ள விருப்பங்கொண்டிருந்தேனோ அவ்வளவு காலமாய் உன்மீதும் நான் ஆசைகொண்டிருந்ததுண்டு. இப்பொழுது சிங்காதனம் என் கையில் சிக்கிக்கொண்டதால் நீயுமென்வசத்தவளாய்விட்டாய். என் மனப்படி நீ நடந்துகொள்வையாகில் நாமிருவருஞ்சேர்ந்து சுகித்து அரசச் செல்வத்தை இணையின்றி அனுபவிக்கலாம்” என்றான். காலவனுடைய மறச்செய்கையையறிந்து அவள் உடன் நடுநடுங்கிப் பின்னுக்கு வாங்கினாள்.

“நீர் ஒருவேளை செல்வியாளுடைய நாட்டை அவள் கையிலிருந்து அபகரித்துக்கொண்டாலும் கொள்ளலாம்; ஆனால் அவளுடலில் ஆவியிருக்கு மட்டும் அவளை அபகரித்துக்கொள்ள உம்மாலாகாது. இது திண்ணம்” என்றாள்.

காலவன் திடீரென்று அவள் கையைப் பற்றிப்பிடித்துக்கொண்டு அவளுடைய இரு கண்களையும் கொட்டாமற் பார்த்தான். “இப்பொழுது எனக்கு விரோதமாய் உன்னைக் காப்பாற்றத் துணிபவன் எவனிருக்கின்றான்? எனது போர்வீரர்கள் உன் பிதாவின் போர்வீரர்களினும் பலமடங்கு எண்ணிற்கும் வீரத்திற்கு மிக்கவராவர். அரண்மனையோ இப்பொழுது என் கைவசமாயிற்று; பொழுதுவிடிந்தால் பிரதான நகரியாகிய சுந்தரபுரியும் என்னை அரசனாக மதிக்கப்போகின்றது. நீயுமென்னை மணம்புரியச் சம்மதித்தாயென்று உலகத்தார்க்குத் தெரிவிக்க இந்த மோதிர மென்விரலிலிருக்கின்றது பார்” என்று சொல்லிக்கொண்

டே பலாத்காரமாய் அவள் விரலில் அணிந்திருந்த ஓர் மோதிரத்தை உருவி எடுத்துத் தன் விரலில் அணிந்துகொண்டனன்.

செல்வியாள் இத்துராகிருதமான செய்கையைக்கண்டு ஆற்றாதவளாய் நெருங்கிய குரலுடன் "ஏ கசடா! அம்மோதிரத்தை என்னிடந்தந்திடு அஃது எனதன்று. உக்கிரசேனன் என்மீது வைத்திருந்த அன்பினறிகுறியாய் ஒன்பது பத்து வருஷங்களுக்குமுன் எனக்கு அளித்ததாகு மவ்வாழி. ஆதலால் அதனைத் திரும்ப என்னிடந் தந்திடுவதே உனக்குத் தகுதியாகும்" என்றாள்.

காலவன் மறுபடியும் சிரித்துவிட்டு, "அப்படியானால் பழம் நழுவிப் பாலில்விழுந்ததுபோலன்றோ ஆயிற்று. உக்கிரசேனன் இனித்திரும்பி இந்நாட்டுக்கு வரப்போகிற காலமில்லையென்பது நிச்சயம். உனக்குப் பலவிதத்திலும் இன்பந்தருவதற்கு ஆற்றலுடைய யான் இருக்கையில் அவன் வரவை நீ என் எதிர்பார்க்கவேண்டும்? அந்த எண்ணத்தை முற்றிலுந் துறந்துவிடு. யாவருமறிய நாமிருவரும் என்று நாயகனு நாயகியுமாய் இணைக்கப்படுவோமோ அன்றுவரையிலும் நீ என்னாலளிக்கப்படுஞ் சிறையிலிருந்து காலங்கழிப்பாயாக" என்று ஆணையளித்துவிட்டு அவ்வாழியையும் தன் சிறு விரலில் இட்டுக்கொண்டு சரேலென்று அவ்விடம்விட்டு வெளியே போனான்.

திரும்பி அரசனுடைய அறைக்குள் புகுதலும் அங்கிருந்து அரசனுடைய பிரேதம் நீக்கப்பட்டிருப்பதைக் கண்டு சிறிதுநேரம் மேலுங்கீழும்பார்த்துக்கொண்டே அவ்வறையில் அங்குமிங்கும் நடவாநிற்கையில் அவனுடைய மனிதர்களிலொருவன் அதி வேகமாய் ஓடிவந்து அவனை வணங்கி "ஐய, யாரோ ஒருவன் வெளியிலிருந்து அரண்மனைக்குள் வரவேண்டுமென்கிறான். அவன் பார்க்க அதிரூபவானாயிருக்கிறான். வயசும் வாலிபந்தான்" என்றான்.

காலவன் சிறிது நேரம் திகைத்து நின்றுவிட்டு வந்த தூதனை உருட்டி விழித்து ஒரு பார்வைபார்த்து "வந்திருப்பவன்யார்?" என்று கேட்டான்.

அந்தத்தூதன் சுந்தரபுரிக்குவந்து ஒருவருஷந்தானிருக்கும்; அதற்குமுன் இந்நாட்டில் நிகழ்ந்த செய்திகளொன்றும் அவனுக்குத் தெரியாது. ஆதலால் அவன் பின்வருமாறு சொன்னான்.

"அவருடையபெயர் வீரசேனனாம். அவர்வெகுநாளாய்த் தேசயாத்திரைசெய்துவிட்டுத் திரும்பத்தன் சிற்றன்னையின்நாட்டிற்கு வந்திருக்கிறாராம்" என்றான்.

பதுஞ் சரித்திரத்தை உற்றுநோக்குஞ் சத்புத்திரரெவர்க்கும் நன்குவிளங்குமென்பது திண்ணம். மேலும் பூர்வீக சரித்திரங்களைக் கவனிக்குங்கால் நம்மிந்தியர்களிவ்விஷயத்தில் மற்றையஜாதியாரைப்போல் மிகவுங் குரூரர்களல்லவென்பதும், மதவிஷயத்திற்காக மனிதர் இரத்தத்தை ஆறுகப்பெருகச் செய்தது மற்றையநாட்டாரே என்பதுந் தெரியவரும். இச்சிறந்ததோர்குணம் இந்தியர்களுக்கமைந்தது தங்களது பொறுமையென்னுமோரருமைக்குணத்தாற்றானோ, அன்றேல் வலியின்மை காரணம்பற்றியோ, அறிகிலேன். மதஹிம்சா சரித்திரத்தில் (History of religions persecution) நம்பாரதகண்டத்தின் ஸ்தானங்கடைப்பட்டேநிற்குமென்பதற்கு ஐயமின்று. அஃது நமக்கோர்பெருமையே. நாம் அணியத்தக்கதோராணிகலமே. இனி, மேற்கூறிய கூற்றைச் சரித்திர வாயிலாக உறுதிப்படுத்துவோம்.

இற்றைக்குச் சற்றேறக்குறைய 2300- வருடங்களுக்கு முன் அக்காலத்தில் ஐரோப்பாக்கண்டத்திலறிவிற் சிறந்தோங்கியுள்ள கிரீஸ் தேசத்திலவதரித்து முன்னும் பின்னும் அவர்க்கு நிகரிதுவரை யிவ்வுலகில் ஞானத்திலும் நியாயத்திலுங் குணத்திலுமிக்கோர் உதித்தனரோவென வையுறும்வண்ணமகமும் புறமுமொன்றாய்க்காட்டிய சாக்ரட்டீஸ் (Socrates) என்ற மகானைப்பற்றி உயர்ந்தோர் யாவருங்கேட்டிருக்கலாம். இம்மகானைப் போற் சிறந்தவர் சூரியமண்டலத்தைச் சுற்றியோடும் பலகிரகங்களிலொன்றாகிய இப்பூமியிற் சிலரேயுளர். இவர் நாமம் இப்புவியில் மானிடர் உள்ளளவு மறையாதென்பதற்கு ஐயுறல் வேண்டாம். இம்மகான் தமது, பழுத்த முதுமைப் பருவமாகிய எழுபதாம்வயதில் சிநேகிதர்கள் பந்துக்கள் சிஷர்களால், சதா சூழப்பட்டிருந்தும் அக்காலத்திய பூதவணக்கத்திற்கு மாறான கொள்கைகளை மனதிற்கோடலும் அதை மற்றையோர்க்குப் போதித்தலுமாகிய குற்றத்திற்காக மரணதண்டனைக்கு விதிக்கப்பட்டாரென்பதைக் கேட்டலும் நடுக்கங்கொள்ளாதார்யாவர்.

பின்னர் 1900-வருடங்களுக்குமுன்னர், கோடிக்கணக்கான ஜீவான்மாக்கள் ஆத்மரக்ஷிப்புக்கு ஓர்மரக்கலமென ஏறிச்செல்லுங்கிரிஸ்துமதப்புணையை முடித்து இத்துக்கசாகரத்தில் மிதக்கச்செய்த யேசுகிரிஸ்துவென்னு மப்பெரியவரை எக்குற்றத்திற்காக சிலுவையிலறைவித்தனர். யூதமதத்திற்கு விரோதமானவோர் மதம் ஸ்தாபனஞ்செய்ததற்கன்றோ ஆ! பெருங்குற்றமே!! பின்னர் ஸ்த்தீபன், (Stephen) என்பவர் கிரிஸ்துவைப் பின்பற்றியதற்கும் அவரைப்புகழ்ந்துரைத்ததற்குமாகக் கல்லாலெறிபட்டுயிர்துறந்ததுந் தெரியாதவிஷயமா?.

சீரியாதேசத்தின் ஓர் மூலையிலுற்பத்தியாகி ஐரோப்பாகண்டமுழுவதும் பரவுமுன் கிறிஸ்துமதஸ்தரனுபவித்த கஷ்டநஷ்டங்களுண்மையாகவே கேட்பவர்களின் கண்ணீர்க்கலனைக் கவிழ்க்குந்தன்மையது. ரோமாபுரியில் அரசு செலுத்திவந்த நீரோ (Nero) டொமிசியன் (Dometian) செவரஸ் (Severus) முதலிய அரசர்கள் கிறிஸ்தவர்களின் தலைகளை புல்லங்கதிர்களைக் கொய்யும் வண்ணம் கொய்தார்களென்பதைச் சரித்திரங்கள் சதா கூறிக்கொண்டேயிருக்கின்றன.

கிறிஸ்துமதம் ஐரோப்பா முழுவதும் பரவியபின் அம்மதத்திற்கு மாறான கொள்கையையுடையோர்க்கு நேர்ந்த கஷ்டங்களையும் அதன் பின்னர் அம்மதத்தின் கண்ணுள்ள சிலகுற்றங்களை சீர்திருத்தமுயன்றலூதர் மதஸ்தருக்கும் ரோமன்மதஸ்தருக்குநடந்த போரிலுள்ள பழியஞ்சாப்பாதகங்களிற் சிலவற்றையும் இவண் கூறுகின்றேன். ரோமாபுரியில் கிறிஸ்துமதம் நிலைபெற்றவுடனே ஆற்றற்கரிய கொடுமைகளைச் சுமந்து நிலைபெற்ற கிறிஸ்தவர்களாவது மதஹிம்சா தொழிலினின்றும் விலகினரோவெனின், அதுவுமில்லை. மாமியாருள்ளளவும் அவளால் சுமத்தப்பட்ட வருத்தங்களை அநுபவித்துச் சகித்துவந்த மருமகள், மாமியார்காடுசேர்ந்தத் தான் மாமிஸ்தானம் வகிக்கும்போது தன்மருமகளை வருத்தத் தலையிடல்போல் கிறிஸ்தவரும் மற்றையோரை வருத்தமுயன்றார்கள்.

முதற்கண் ரோமாபுரியில் இன்குயிசிசன்(Inquisition) என்னுமொரு நியாயஸ்தலமேற்படுத்தினார்கள். அந்தஸ்தலத்தில் ஸ்தானம்வகித்தோர் அதிகாரமென்னையோவெனில் அவர்மதக் கடவுளை நிந்தனைசெய்தவர்களையும் அக்கடவுள்பேரில் நம்பிக்கையற்றவர்களையுங் கண்டுபிடித்துத் தண்டித்தலேயாம். இதுபோன்ற நியாயஸ்தலம் வரவர ரோமாபுரியிலிருந்து இத்தாலியா (Italy) ஸ்பெயின் (Spain) ஜெர்மனி (Germany) பிரான்சு (France) முதலான தேசங்களிலு மேற்படுத்தப்பட்டது. மேற்கூறிய குற்றவாளிகளுக்கு விதிக்குந்தண்டனை என்னையோவெனில் சிரச்சேதஞ் செய்தலும் மலைபோல் எரிகின்ற அக்கினி ஜோதியிலாகுதியிடுதலுங் கல்லுடன்கட்டிக் கடலிலாழ்த்தலும் மூச்சைப்பிடித்துக் கொல்லுதலுமாகிய இவைகளே. இவ்விதபயங்கரமான தண்டனைகள் ஏட்டில் மட்டுமெழுதிவைத்திருந்ததாக எண்ணவேண்டாம். ஆயிரக்கணக்கான ஜனங்களிக் குரூரதண்டனைகளுக் கிரையானார்களென்பதற்கையமில்லை. டார்க்கிமிடா(Torquimeda)என்னும் கருணாநிதி இந்நியாயஸ்தலத்திற்கு அதிபதியாயிருந்த 16. வருடத்தில் 9000-பெயரை அக்கினிபகவானுக்கு யிரையிட்டதாகவும், டயாகோடீசா (DiegoDeiza) என்பவர் தான் அதிபதிஸ்தானம் வகித்த 8- வருடத்தில் 1600-பெயரை மேற்கூறிய தண்டனைக்கு ஆளாக்கினதாகவும் லாரெண்டீ (Lorentee) என்

சமாசாரக்குறிப்புகள்.

திருவனந்தபுரம் மகாராஜாவின் ஔதாரியம்:—சாஸ்திர சம்பந்தமான இயந்திரக் கல்விகளைக் கற்றுவருவதற்காக இரண்டு வித்தியார்த்திகள் ஐரோப்பா அல்லது அமேரிக்காவுக்குச் செலவார்களாயின் அவர்களுக்குரிய எவ்வகைச் செலவுகளும் வருஷாந்தரம் 200-பவுன் விதம் நன்கொடையுமளிப்பதாக நமது திருவனந்தை மகாராஜா வாக்களித்திருக்கின்றனர். இவ்வீகை வித்தியாபிவிர்த்தி விஷயமாய் இவர் கொண்டிருக்கும் ஊக்கத்தை நன்கு விளக்குகின்றதலலவா?

*   *   *

மழைபெய்வித்தல்:—சிலவருஷங்களுக்குமுன் அமேரிக்கா கண்டத்தில் வறுப்புண்டாயிற்று அப்பொழுது மழை பெய்விக்க ஏதேனும் வழி கண்டுபிடிக்கவேண்டுமென்று சிலர் முயன்று வந்தார்கள். அவர்கள் ஆகாயத்தை நோக்கிப் பெரிய வெடிகளைச்சுட்டு மழை பெய்வித்தார்கள். இதை அறிந்து இற்றலி தேசத்திலுள்ளவர்கள் தங்கள் நாட்டில் அடிக்கடி உண்டாய்ப் பயிர்களைச் சேதப்படுத்தி வரும் கன்மழைகளை உடைத்து நன்மழையாக்குவதற்குச் சிற்சில நூதனமான வழிகளுடன் அமெரிக்கர்செய்த வுபாயத்தைக் கைக்கொண்டு அவ்வறிவைப் பெருக்கிவந்தார்கள். ஐரோப்பாவின் தென்றிசைகளின் விளைவுகளுக்குப் பெருங் கேடுகளை விளைத்துவந்த, கன்மழையின் கொடுமையும கொடுங்காற்றின் ஊகமும் மின்னல் வெட்டின் சக்தியும் இடியின் கோபமும் இப்பொழுது பெரும்பான்மையும் மனிதர்கள் கண்டுபிடித்திருக்குந் தந்திரங்களால் தணிப்புண்டிருப்பதுமன்றி மேகத்தை மழையாகப் பெய்விக்கவும் உபாயமும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது. ஒருவகையாய்ச் செய்யப்பட்டிருக்கும் பீரங்கிகளை மேகத்தை நோக்கிச் சுட்டால் மேகத்திலநின்றும் மெல்லமெல்ல மழைபொழியத் தொடங்குகிறதை யாவரும் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துச் சந்தேகந் தெளிந்திருககிறார்கள். பயிர்களுக்குத் தீங்குவராமற் காத்துக்கொள்ளவும் தீங்கு வந்தால் நஷ்டங்கொடுத்துவருவதாக ஏற்றுக்கொள்ளவும் ஏற்பட்டிருக்கும் சங்கத்தார் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் யந்திரம் மழைபெய்விக்குமென்பதை உறுதியாகத் தெரிந்துகொள்ளக் கருதிப் பலவாறு சந்தேகித்து நடந்துவிட்டுப் பின்னர் தெளிந்திருக்கிறார்க

ளாம். இவ்வெடிக்கு மருந்துவேண்டாவாம். இதனால் அபாயங்களும் நேரிடாவாம். கையால் தொடாமலே ஆயிரம் வெடி ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்துவெடிக்கும்படி செய்யப்பட்டிருக்கிறதாம் இப்புதிய யந்திரம். இவ்வெந்திரங் கண்டுபிடித்தவர்கள் வேறெவர்க்கும் அதை உண்டாக்கவும் உபயோகிக்கவும் அதிகாரங்கொடுக்க உடன்படுகின்றிலர். இவர்கள் இப்பொழுது சிறு தொகை வாங்கிக்கொண்டு பயிர்களை இரட்சித்துக்கொடுக்க உடன்படிக்கைகள்செய்து பெருந்தனவான்களாய் விரைவில் அமைந்திடுவார்கள் என்று யாவராலும் பூர்ணமாய் நம்பப்படுகிறது. இஃதுண்மையாயிருக்கும்பக்ஷம் இந்தியாவில் மழையில்லாமையால் வறுப்பு நேரிடுகின்றதென் றுறுதியாய்க் கூறிவரும் ஆங்கிலேய அரசாங்கத்தார் இவ்வெந்திரங்களை வருத்தி உபயோகித்து நமது தேசத்தைச் செல்வ நாடாக்கிவிடுவார்கள் என்பது திண்ணம்.

* * *

திருவிழா:—திருவனந்தபுரத்தில் பங்குனித்திருவிழா நடந்தது. சென்ற இருபது வருஷங்களுக்கிடையில இதுபோல சிறப்பாய் இவ்வுற்சவம் என்றும் நடந்திருப்பதில்லையாம். இதற்குக் காரணம் இப்பொழுது திருவனந்தபுரந் தாலூகாவுக்குத் தாசில்தாராய் நியமிக்கப்பட்டிருக்கும் ம-ள-ள-ஸ்ரீ. ராமன் பிள்ளையவர்களே. இவ்விராமநாம சங்கீர்த்தனமும் ஸ்மரணையுமே இக்குள்ளார் நாவிலும் மனதிலுங் குடிகொண்டிருக்கின்றன. பிராமணர்களுடைய யோகந்தான் இவரை யிங்கு வருவித்ததென்பர் பலர். பதுமநாபன் 'கண் விழித்துக்கொண்டுதானிருக்கிறார்' என்று காட்டுவதற்காகவே இத்தகைய சத்தியவானை யிவ்விடத்திற்கு வருவிக்கும்படியாக நமகாருண்யமகாராஜவின் மனதையும் திவான்ஜியவர்கள் மனதையும் தூண்டிவிட்டிருக்கிறார்போலும் என்பர் பலர். இவரைக்கண்டு பயந்தும் இவர்மீது அன்புற்றும் தொழிற்பணியாளர் எவரும் தத்தம் கடமைகளைச் சரியாய் நடத்திவருகிறார்கள். அப்பம் அவல்முதலியவற்றிலிருந்த கற்களெல்லாம் பயந்து அவற்றிலிருந்து ஓடிப்போயொளித்துக்கொண்டன. தூண்களிற்கட்டியிருக்கும் குலைவாழைகள் அப்படியே தூங்கிக்கொண்டிருந்தன. ஈ, எறும்பு, காகங்களும் அதன் கிட்டப்போகத் துணியவில்லை. இவரது ஆணையே ஆணை! இவர் இத்திருவனந்தபுரத்திலேயே நெடுநாள் இருந்து வாழ்வாராக.

இத்தன்மைவாய்ந்த கனவான்கள் பலர் நாளும் நாளும் பல்கி நம்மலைநாட்டைச் சிறப்பிப்பாராக.

நமது பத்திரிகையைப்பற்றிவந்த
நற்சாக்ஷிப்பத்திரங்கள்.

சென்றதையாதம் 29உ வெளிவந்ததான "அறிவுவிளக்கம்" என்னும் தமிழ்ப்பத்திரிகையைப்பார்த்து மிகுந்தமகிழ்ச்சியடைந்தேன். இதில் அமைத்திருக்கும் விஷயங்களையும், விஷயதானம்செய்தற்கும் இப்பத்திரிகையைப்போஷிப்பதற்கும் முன்வந்தஉபகாரிகளுடைய பெயர் வரிசைகளையும் பார்த்தபொழுது எனக்குப் பின்னும் அதிகமகிழ்ச்சியுண்டாயிற்று. இப்பத்திரிகைதோன்றிய மலைநாடானது தமிழ்ப்பாஷையையே பேசிக்கொண்டுவந்தவர்களுக்கும் மிகச்சிறந்த தமிழ்ப்புலவர்கள் சிலர்க்கும் அவர்களை அன்புடன் ஆதரித்த பிரபுக்களுக்கும் இருப்பிடமாகஇருந்ததென்பது பழைய தமிழ்நூல்களால் நன்குதெரிகின்றமையாலும் இக்காலத்து அவ்வாறு சொல்வதற்கு இடமில்லாமையாலும்மேற்கூறிய இருவகை உபகாரிகளும் பிறரும் அன்புவைத்து தம்மாலியன்ற அளவு உதவி இப்பத்திரிகையை ஆதரித்தல், செந்தமிழ்வளர்ச்சிக்குமிகச்சிறந்தகருவியாக இருத்தலன்றி இந்நாட்டைப்பண்டைநிலைக்குக்கொண்டுவருமென்பது நான்சொல்லாமலேவிளங்குமென்று இம்மட்டோடேநிறுத்துகிறேன்.

கும்பகோணம் காலேஜ், 23—2—1901.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

அறிவு விளக்கம்:—இம்முதலிலக்கத்தை வைத்து இப்பத்திரிகையின் தன்மையை நிர்ணயிக்கின் இப்பத்திரிகை தெளிந்த உயர்தரநடையும் சிறந்த பயனுள்ளபொருளும் ஒருங்கே அமையப்பெற்றதெனச்சொல்லலாம். ஆங்கிலம் கற்காத தமிழருக்குமட்டுமல்ல ஆங்கிலங்கற்ற அறிவுடையோர்க்கும் இப்பத்திரிகை பயன்படுமென்பது எமது உறுதியான நம்பிக்கை. ஆதலின் நமது நாட்டாரனைவரும் இப்பத்திரிகைக்கு வேண்டிய வுதவிகள் புரியவேண்டுமென்று அபேக்ஷிக்கிறோம்.

நமது நாடு தமிழ்நாடோவென ஐயுறுவதற்கிடமாகியதற்காலத்தில் தமிழ்மொழியை இங்கு ஸ்தாபிக்க வெழுந்த இப்பத்திரிகை நிலைபெற்று ஜனோபகாரமாம்படி எல்லாம் வல்லகடவுள் அருள்புரிவாராக.

நாகர்கோவில். நாஞ்சிநேசன்.

"ARIVU VILAKKAM":—By this title Mr. C. Sivagnana Thasigar of Trivandrum has issued a monthly Tamil periodical a copy of the first number of which

has been kindly forwarded to us for notice in our paper. This literary venture appears to have been entered upon after much thought and careful preparation. Among its patrons we find the names of such well-known Tamilians in Travancore as Messers. T. Vedathrishathasa Mudaliar and T. Ponnambalam Pillay. Some of his contributors are also evidently persons deeply interested in the preservation and development of Tamil literature. We wish Mr. Thasikar every success in his praiseworthy attempt.

Nagercoil:—**Travancore Times.**

அறிவுவிளக்கம்:—சுயபாஷாப் பத்திரிகைகளின் பெருக்கைவிரும்
பும்யாம் 'அறிவுவிளக்கம்' ஆல்போல் வேரூன்றி பல இடையூறுகளும்
எஞ்சாது மென் மேலும் தழைத்தோங்குமென நம்புவதற்கு, இப்பத்
திரிகைக்குப் போஷகர்களாகவும், விஷயதானஞ் செய்பவர்களாகவும்,
வரையப்பட்டுள்ள சிலகனவான்களின் நாமதேயங்களும் பத்திரிகைபுறப்
படுமுன் உதாரமாய்க்கொடுக்கப்பட்டுள்ள சந்தாவரவுகளும் போந்தகார
ணமாகும். ஆயினும் கைமாறில்லா உபகாரம்நீடிப்பதரிதாகையால பத்தி
ராதிபரின்உழைப்பே பத்திரிகையின் நிலைவரத்துக்குப் பிரதானமாக வே
ண்டியதாகும். வர்த்தமானப் பிரதானமிர்ந்தி, உடற்கூறுநூல், செல்
வநூல் ஜீவராசிகள் போன்றசாமான்யருக் கருகலான விஷயங்களைச்
சுமந்துநிற்கும் இம்முதற் சஞ்சிகை உயர்தரக்கல்வியடைந்தகனவான்க
ளுக்கே இப்பத்திரிகை முக்கிய உருசிகொடுக்கக்கூடியதாயும், அவர்களி
னுபயோகத்துக்கென்றே பிரதமத்தில் கருதப்பட்டுள்ளதாயும் கொள்வது
சான்றாகும்.

சேலம். தக்ஷிணதீபம்

அறிவுவிளக்கம்:—இத்தலைப்பெயர்பூண்ட ஓர் மாதாந்தத் தமிழ்ப்
பத்திரிகை சுமார் 24- பக்கமுள்ள புஸ்தகரூபமாக நாளது தை மீ 29
உ முதல் திருவனந்தபுரத்தில் பிரசுரிக்கப்பட்டுவருகிறது. இளைஞருக்
கேற்ற எளிய நடையில் எவ்விதப்பிழையுமின்றி தெளிவான அக்ஷரங்
களில் எவர்க்கும் பயன்படுமாறு பலபெரிய விஷயங்களைப் பற்றி வியா
சங்களும் பொருந்திய வியாசங்கள் ஆரியதிராவிட ஆங்கிலேய வித்வத்

சிரேஷ்டர்களால் எழுதப்பட்டு வெளியாக்கப்படுகின்றன. எமக்கனுப்பப்பட்ட முதல் சஞ்சிகையில், நம் இந்தியசக்கிரவர்த்தி, அறிவுவிளக்கம், விண்ணப்பம் உடற்கூறுநூல், செல்வநூல், சத்தியவதி, செல்வியாள், பறவைகள் முதலியவைகள் தெளிவானநடையில் எழுதப்பட்டிருக்கின்றபடியால் இதனருமையும் இதன் பெருமையுமிதற்கிட்டுள்ள பெயரினாலேயே நன்கு விளங்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்பத்திரிகை தமிழ் நாடெங்கும் கற்றோர் மற்றோர் யாவரையும் தன் நேசராக்கி நன்மையைவிளைக்குமென்று நம்புகிறோம். இதன் வருஷச்சந்தா ரூபா 2 (இரண்டு ரூ) தற்காலத்தில் தமிழ்க்குறையை நீக்கக்கருதிய இப்பத்திரிகையும் நீடூழிவாழ்க:—

சாத்தூர். ஆத்மசம்ரக்ஷிணி.

அறிவுவிளக்கம்:—அதைநாம் வாசித்துப்பார்த்ததில் அதற்கிட்ட பெயர் யதார்த்த நாமமென்பது எமதபிப்பிராயம். பத்திராசிரியரும் விஷயதானஞ்செய்பவர்களும் கல்வி கேள்விகளிற் சிறந்தோரென்பதைப்பத்திரிகை நன்கு விளக்குகின்றது. போஷகர்களும் பத்திரிகையில் அன்புடையோரென அறிகின்றேம். பத்திரிகையின் மாசற்ற செந்தமிழ்வாசகநடை வாசிக்கிறதற்கும் ஆசை யூட்டுகின்றது. பொருளும் அவ்விதமே. கற்றவர்க்கும், மற்றவர்க்கும் இஃதோர்நற்பத்திரிகை. இஃது நீடூழி வாழ்க இறைவனருள்செய்வாரரக.

திருச்சிநேசன்

அறிவு விளக்கம்:—மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவருமவசியம் உய்த்துணரவேண்டற் பாலதாகிய அறிவை விளக்கவென்றுகங்கணங்கட்டிக்கொண்டு வெளிவந்திருப்பனதப் பற்றியும் அன்றிசிலவித்வசிரேஷ்டர்கள் நிரம்பவுங் கருணையுடன் விஷயதானஞ்செய்து வருவதைப் பற்றியும் பெருமகிழ்ச்சியுற்றும். இப்பத்திரிகைமென்மேலும் விருத்தியாகி எவரானுங்கருதப்பட்டு நீடூழிகாலம் நடைபெற ஆண்டவன் துணை செய்வானாக.

திருநெல்வேலி. சத்தியநேசன்.

அறிவு விளக்கம்:—இப்பெயர்கொண்டதோர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை திருவனந்தையினின்றும் பிரசுரிக்கப்படுகிறது. 24-பக்கம் கொண்டது. ஸ்ரீவள்ளல். சோ. சிவஞானதேசிகர் என்பவர் பத்திராதி

பராக வெளியாகின்றது; அரும்பெரும்பொருள்களைப்பற்றி விரித்துக்கூறும் இத்தகையப்பத்திரிகைகள் நாளும்பல்குவனவாக.

சென்னை. ஞானபோதினி.

அறிவு விளக்கம்:—இப்பத்திரிகை கைக்கடக்கமான புஸ்தகரூபமாகவும் அறிவுக்கேற்ற சில பலவிஷயங்கள் அடங்கியுள்ளன வாதலாலும் இதையாவரும் வாசித்து பத்திரிகையை ஆதரிப்பார்களென நம்புகிறோம். இப்பத்திரிகைக்கு அனேக B. A. B L. M. A. முதலிய பட்டதாரிகளான வித்வான்களெல்லாம் விஷயதானம் செய்கிறதாகத் தெரியவருகிறதால் அரிய பெரியவிஷயங்களெல்லாம் இனி இதில் வெளிப்படும்போலும்.

விகட தூதன் சென்னை.

அறிவு விளக்கம்:—இப்பந்திரிகையில் அடங்கிய விஷயங்களாவன:—அறிவு விளக்கம், விண்ணப்பம், உடற்கூறுநூல், செல்வநூல், சத்தியவதி, செல்வியாள், பறவைகள், சமாசாரக்குறிப்புகள். இவை பற்பல உயர்ந்த கண்ணிய மனிதர்களால் எழுதப்பட்டுள்ளன, இப்பத்திரிகை நிறைவேற நம் நண்பர்கள் முயலுவார்களாகில் அதிமேன்மை தரும், என்றாலும் நமது நண்பர்கள் ஒருபுறமிருக்க, இப்பத்திரிகையின் பத்திராதிபர் நமது நண்பர்களின் மனதை குதூகலிக்கச் செய்வதே அவருடைய பத்திரிகை நிறைவேறுதலுக்கு தகுந்த விதமாம். நமது ஆரிய மித்திரர்களும் இப்பத்திரிகைக்கு ஆசிகூறி வந்தனம்புரிவாராக. இப்பத்திரிகை நிலைபெற்று நம்நாட்டில் பகிரங்கமாய் வழங்கிவர எல்லாம் வல்ல கடவுள் அருள்புரிந்து ஆசீர்வதித்தருளுவாராக.

புதுவை நேசன்.

,, சந்திரபானு லாலா அவர்கள்,
Irrigation Supervisor.,
நாகர்கோவில்.

,, A. சின்னசாமி நாயுடு அவர்கள்,
சிந்துபூந்துறை.,
திருநெல்வேலி.

,, G. வெங்கிடசுப்பிரமணிய அய்யர் அவர்கள், B A.,
தாசில்தார்.,
தோவாளை பூதப்பாண்டி.

நமது பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்பவர்களிற் சிலர்.

கனம். கே ஜி. சேஷய்யர்அவர்கள். B. A. B. L.,
,, எஸ். அனவரதவிநாயகம் பிள்ளைஅவர்கள். M. A.,
,, E. சுப்பராய முதலியார்அவர்கள்,
,, ஏ. கே. கிருஷ்ணய்யங்கார்அவர்கள்,
,, K. N. சிவராஜ பிள்ளைஅவர்கள். B. A.,
,, எஸ். கணபதிப் பிள்ளைஅவர்கள்,
,, M. R. கிருஷ்ணராவ்அவர்கள்,
,, வெங்கிடேசுவர ஐயர் அவர்கள். B. A.,
,, இராஜாங்கம் ஐயர் அவர்கள். B. A.
,, லக்ஷ்மணபிள்ளை அவர்கள். B. A.
,, கோலப்பபிள்ளைஅவர்கள். B. A.
,, A. நமசிவாயம்பிள்ளைஅவர்கள். B. A.
,, கணபதிப்பிள்ளைஅவர்கள். B. A.
,, தி. ப. சிவராமபிள்ளைஅவர்கள்.,
,, மு. பொ. ஈசுவரமூர்த்திப்பிள்ளைஅவர்கள்.,
,, கோபாலகிருஷ்ணய்யர்அவர்கள்.,
,, இராமகிருஷ்ணய்யரவர்கள். B. A.
,, ஞானசிகாமணிமுதலியார்அவர்கள். B. A.
,, இராமசுவாமி ஐயர் அவர்கள். B. A. B. L.
,, அ. குமாரசுவாமிப்பிள்ளைஅவர்கள்.
,, வித்வான், சுன்னாகம்,யாழ்ப்பாணம்,
,, டி. எஸ். குற்றாலலிங்கம்பிள்ளைஅவர்கள்.
,, டி. எஸ். கணேசபிள்ளைஅவர்கள்.
,, K N. குமரேசபிள்ளைஅவர்கள்.,
,, எக்நேசுரய்யர்அவர்கள். B. A.
,, கா. த. மீயாகான் இராவுத்தர்அவர்கள்.

பேரவுகர்கள் வரவு.

		ருபா.
ஸ்ரீமான்.	S. கணபதிப்பிள்ளை அவர்கள்	10
,,	P. C. வள்ளிநாயகம்பிள்ளை அவர்கள் ...	10
,,	K. S. கிருஷ்ணசுவாமிஐய்யர் அவர்கள்	5
,,	S. திரவியம்பிள்ளை அவர்கள்	7

சந்தா வரவு.

	நம்பர்		ரு.
ம-ள-ள-ஸ்ரீ	9.	வி. எஸ். பத்மநாபய்யர் அவர்கள்	2
,,	7.	சி. வ. ஆறுமுகம்பிள்ளை அவர்கள்	2
,,	43.	பி. அருணகிரிமுதலியார் அவர்கள்	2
,,	36.	திரவியம்பிள்ளை அவர்கள்	2
,,	38.	வேலாயுதன் சிற்பாசாரி அவர்கள்	2
,,	84.	மா. சிவதாணு ஆசாரி அவர்கள்	2
,,	83.	ம. பெருமாள் ஆசாரி அவர்கள்	2
,,	71.	டி. கிருஷ்ணராஜு அவர்கள்	2
,,	3.	தே. முத்தையபிள்ளை அவர்கள்	2
,,	46.	காசியாபிள்ளை அவர்கள்	2
,,	139.	சுப்பையாபிள்ளை அவர்கள்	2
,,	35.	ஐ. பத்மநாபன் ஆசாரி அவர்கள்	2
,,	302.	ஆ. கு. அ. சு. பத்மநாபய்யர் அவர்கள்	2
,,	180	T. லக்ஷ்மணபிள்ளை அவர்கள் B. A.	2
,,	87.	சி. மாணிக்கம் ஆசாரி அவர்கள்	2
,,	65.	G. பரமேசுவரய்யர் அவர்கள்	2
,,	201.	வி. பஞ்சநதம்பிள்ளை அவர்கள்	2

☞ குறிப்பு:—நமது சந்தாதார்கள் கடிதம் எழுதும்பொழுது தங்கள் ரிஜிஸ்டர் நம்பர் போட்டு எழுதவேண்டுகிறோம். மாதிரிப்பத்திரிகை வேண்டுவோர் ருபா 0-4-6. அனுப்பினல் அனுப்பப்படும். ப—ர்.